145

**வேலூர் நகராட்சி மன்றத்தில்**
**4-7-1954 ஞாயிற்றுக்கிழமை**
**பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின்**
**உருவப்பட திறப்பு விழாவில்**

# கோவை ஜி. டி. நாயுடு

**அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு**

**அன்புள்ள தலைவர் அவர்களே! தோழர்களே!!**

முதலில் மனதில் எவ்வளவு அன்பும், ஆர்வமும், பெருமகிழ்ச்சியும் இருந்தும், அதைத்தெரிவிக்க சந்தர்ப்பமும், சக்தியும் இல்லாது போயினும், இம்மாதிரி நிகழ்ச்சிகளில் வழக்கமாக வந்திருக்கும் முறையில், இன்று நீங்கள் நம் நாட்டின் உவமையற்ற தலைவரும், இருளையகற்றவந்த அறிவாளியுமான ராமசாமிப் பெரியார் படத்தை உங்கள் முன்னிலையில் திறந்து வைக்கும்படியான சந்தர்ப்பத்தை எனக்குக்கொடுத்ததற்கு இப்போது வேறு வகைகளின்றி இந்த சில வார்த்தைகளால் என் மகிழ்ச்சியை தெரிவித்து என் கடமையை பூர்த்தி செய்து கொள்ளுகிறேன்.

என் வாழ்நாளில், இதுவரை, தொழில்களிலும் அதன் அறிவுவளர்ச்சிகளிலும், இவற்றால் ஏற்படும் வியாபாரங்களிலும், வியாபாரம் என்றால், தொழில் சம்பந்தமான சிக்கன வியாபாரம்— அதன் அறிவு என்றால், இளமைப் பருவமும் அருமையான செல்வமும் வீணாவதைத்தடுத்து ஏதாவது ஊதியம் பெறுவதை கற்றுக்கொள்ளும் கல்வி— ஆகிய இவற்றில் செலவழித்து வந்திருக்கிறேன்.

அறுபதாம் கல்யாணம் என்றுசொல்லி அநேகர் வெகு சிறப்பாக பழைய காலத்து கல்யாண மாதிரியே மிகுந்த

ஆடம்பரங்களோடு சடங்குகளைச் செய்வார்கள். ஆனால், தம்பதிகளில் வித்தியாசம் இல்லை. எனக்கும் இந்த அறுபதாவது வயது முடியும்வரை, இருந்த தொழில்களை, சில அநீதிகளால் விளைந்த இடையூறுகளால் விடவேண்டிய சந்தர்ப்பம் வந்தது. இதுவரை அனுபவத்தில் கிடைத்த அறிவு தவிர, மற்ற எந்த விதமான செல்வங்கள் இருந்தாலும் அவற்றையும் விட வேண்டிய நிலை வந்து, அவைகளை விட்டும் வந்திருக்கிறேன்.

இன்று நடக்கும் விழாவை என்னைப் பொருத்த வரை, அறுபதாம் கல்யாணம் என்று எடுத்துக் கொண்டு மேற்சொன்ன பழைய அலுவல்களையே பின்னும் தொடர்ந்து பிடித்துக்கொள்ளுவதா அல்லது வேறு புதிய அலுவல்களை கல்யாணம் செய்து கொள்ளுவதுபோல வேறு தொழில்களிலோ அல்லது அரசியல் கட்சிகளிலோ, எதில் நுழைவது என்று யோசனையில் இருக்கும்போது, பெரியாரும் என்னை ஒரேமுகமாக பொது நலத்தில் பலமாக பணியாற்றுமாறு சொன்னார். இதைப்பற்றி என்ன செய்யலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் போது, இதற்கு ஒரு ஆரம்ப விழாவாக நீங்களும் பெரியார் அவர்களுடைய படத்தைத் திறந்துவைக்கும்படி கேட்டுக் கொண்டதை நான் மிகுந்த சந்தோஷத்தோடு, தேடாமல் கிடைத்த செல்வம் மாதிரி நினைத்து ஒப்புக்கொண்டேன்.

பெரியார் செய்யும் பணிகள், அநேகர் எண்ணுகின்றபடி அரசியலில் ஈடுபட்டதல்ல. மக்களுக்கு பகுத்தறிவை உபயோகிக்கக் கற்றுக் கொடுக்கும் அறிவுப் பிரசாரம் தான். எனக்கும் எந்தஅரசியல் கட்சிகளில் சேர்ந்தாலும், அதிக நன்மை செய்யக்கூடும் என்ற நம்பிக்கையில்லை. அதனாலே, பெரியாரால் வகுக்கப்பட்ட அநேக கொள்கைகளை, வெகு காலமாக ஆதரித்து, சில கொள்கைகளை நடைமுறையில் அவரைவிட அதிவேகத்தில் கடைப்பிடித்தும் வந்திருக்கின்றேன்.

இவருடைய லட்சியங்களில் அநேகம் நம் நாட்டிற்கு அவசியம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. வயதிலும், அறிவிலும் மிகப் பெரியவர். மிக இள வயதுள்ள முருக்கமான வீரனைப்போல தைரியத்தோடு தீவிரமாகச் செல்கின்றார். இவருடைய லட்சியங்களை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள் என்பதற்கு அறிகுறி யாகவே இன்றுஅரசாங்கம் காங்கிரஸ் கட்சியில் இருந்தும் கூட பெரியாருக்கு எந்த எதிர்ப்பும் இன்றி அமோகமான வரவேற்போடு ஊராண்மைக் கழகம், நகராண்மைக் கழகங்கள் முதலிய பல கழகங்கள் அழைத்துக் கொண்டிருப்பதே சான்றாகும். இவ்வளவு பெரு மதிப்புள்ள பெரியாரின் படத்தை என்னைத் திறக்கும் படியாகக் கேட்டதற்கு நான் பெரியாருக்காவது இந்நகர் மக்களுக்காவது என்ன கைமாறு செய்யமுடியும் என்பதை நினைக்க முடியவில்லை.

எல்லா முனிசிபாலிட்டிகளிலும், பஞ்சாயத்துக்களி லும் பொதுமக்களுக்குஅளவிறந்த நன்மைகளைச் செய்ய முடியும். அதற்கு எந்த சூழ்நிலையாவது கிடைக்கும் பக்ஷத்தில் அதில் எவ்வளவு தூரமும் பாடுபட்டும் செய்வேன் என்று சொல்லுவதைத் தவிர வேறு ஒரு வழியும் எனக்குத் தோன்றவில்லை.

அவ்வித சூழ்நிலைகளில் என்னென்ன செய்யமுடியும் என்பதையும் இன்று கிடைத்த கால அளவில் சொல்ல முடியாததற்கு வருந்துகின்றேன். ஆனால், பொதுவாக இந்த சமயத்தில் பெரியாருடைய கொள்கைகளில் சில, எந்தெந்த விதங்களில் நம் மக்களுக்குத் தேவைப்படும் என்பனவற்றை சுருக்கமாக கூற விழைகின்றேன்.

ஒருவர் ஒன்றில் பழகிவிட்டால் அதை விடுவதுஅரிது. ஆனால் பழையன கழிதலும், புதியன புகுதலும் முறை. இயற்கையாக ஒன்றைவிட்டு ஒன்றுக்கு தாவுவதும் இயல்பு. இன்னிலையில் இனிமேல் வேறு தொழில்

களிலோ, அரசியலிலோ இறங்கி என் காலத்தைக் கழிப்பது என்று ஆரம்பித்தால் பெரியாருடைய லக்ஷியங் களை ஈடேற்றுவதில் ஒரு துளியும் தயங்க மாட்டேன். ஆனால் எனக்கு அதிக அனுபவமுள்ளதும், பொது மக்களுக்கு அதிகப் பயன்தரத்தக்க பழைய தொழில் களிலேயே தொத்திக் கொண்டாலும் பெரியார் லக்ஷியங் களை என்னால் கூடுமானவரை நிறைவேற்றப் பாடு படுவேன். பெரியார் லக்ஷியங்கள் ஒரு சில தவிர்த்து பெரும்பான்மை எந்த அரசியல் கட்சிகளுக்கும் விரோத மானதல்ல. யாருக்கும் கெடுதல் செய்யக்கூடியதுமல்ல. யாருமே பின்பற்றக் கூடியது. இப்பொழுது நம்நாட்டுக்கு வேண்டியதும் அவையே.

மனிதனுக்கு இயற்கையாக பல குணங்கள் இருக்கின்றன. முக்கியமாக ஒரு குணம், ஏதாவது ஒன்றைப் பிடித்தால் அதையே பிடித்துக்கொள்வது. இன்னொரு குணம், தன்னிடம் இல்லாதது எதுவோ அதைத் தேடிக்கொண்டே இருப்பது. அது இயற்கையா யிருந்தாலும், தாம் பிடித்திருப்பது ஒன்று எக்காலத் திற்கும், எவ்விடத்திற்கும் உகந்ததுதான் என்பதையும், தாம் தேடிக்கொண்டிருப்பது அகப்படக்கூடியதா, அகப் பட்டாலும் அதனால் நன்மைகள் உண்டா அல்லது தீமைகள் உண்டா என்பதை ஆராய்ந்து, அக்காரியத்தை எடுத்துக் கொள்வது அநேகரிடம் இல்லை. இந்தக் குறைகள் இன்றுள்ள அரசியலாரிடத்தும், அரசியல் கட்சியிலும் மற்றவரிடமும் மலிந்து கிடக்கின்றன. ஆனால் பெரியாரிடத்திலிருப்பவற்றிலும், அவர் எடுத் துக்கொண்டிருக்கும் பிரயத்தினங்களிலும், காலம் சூழ் நிலை இவைகளால் வேறு சில தவறான வழிகள் பொருந் தாமல் இருந்தாலும், மேற்சொன்ன மற்ற குற்றங்கள் ஒரு அணு அளவும்கூட இல்லை என்பதை இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

பெரியாரவர்களோடு சாவகாசமாக நாம் சம்பாஷிக்கும்போது, இருக்கும் குறைகளைக் கேட்டு,

நாம் எவ்விதம் வறுமைக்கு ஆளாகினோம் என்பதை அவர் விளக்கிச் சொல்லும்போது, இங்குள்ள ஒவ்வொரு இளைஞனுக்கும் இரத்தம் கொதிக்கும். அவர் கூறும் விபரங்கள் முழுவதும் இங்கு சொல்லமுடியாவிட்டாலும் ஞாபகத்தில் வரும் சிலவற்றையாவது சுருக்கமாக இங்கு கூற விரும்புகிறேன்.

ஒரு லக்ஷம் அல்லது இரண்டு லக்ஷம்வரை செலவு செய்து ஆராய்ச்சி நடத்தி சாதாரணமாக நமது மாகாணத்தில் கிடைக்கும் சோளத்தினாலும் ராகியினாலும் விவசாயக் கல்லூரியில் செய்துவந்த மால்ட் பாக்டரியை, லாபம் இல்லையென்ற காரணத்தினாலோ அல்லது வேறு காரணங்களாலோ மூடிவிட்டார்கள். ஒரு ஒரு சமயம் ரேஷன் இருந்த காலத்தில் பழக்கமில்லாத குறைகளால் லாபம் இல்லாமல் இருந்திருக்கலாம். அப்பொழுதும்கூட இறக்குமதியாகும் ஆகார சரக்குகளை நிறுத்தி, அதற்குப் பதிலாக ஒவ்வொரு ஆஸ்பத்திரிகளிலும் மற்ற இடங்களிலும் இதை உபயோகிக்கும் பக்ஷத்தில், இந்த ஒரு பாக்டரியில் வரும் லாபம் ஒன்றேம் மாகாணத்திற்கு வேண்டிய விவசாயக் கல்லூரியையும், விவசாய ஆராய்ச்சி சாலைகளையும், பண்ணைகளையும் நடத்தப் போதுமானது. இப்போது அந்த மெஷின்கள் விற்பனைக்கு வந்து, சில மெஷின்களையும் கூட மைசூருக்கோ, வேறு எங்கோ கொடுத்தாய் விட்டது என்று கேள்விப்படுகின்றேன்.

இதே ரகத்தில் சேலத்தில் ஒருவர் ஒரு நண்பரின் உதவியைக் கொண்டு ஆராய்ச்சி செய்து ஒவல்டீனை ஜெயிக்கும்படியான 'ஒவோமால்ட்' என்பதை தயாரிக்கிறார். ஆனால் இப்பொழுது அது எங்கோ ஒரு மூலைகளில் யாராலோ சில இடங்களில் விற்கப்பட்டு வருகிறது. உதவிக்காக வேண்டி நம் மாகாண கவர்ன்மெண்டையும், மத்திய கவர்ன்மெண்டையும், மற்றுமுள்ள செல்வந்தர்களையும் பார்த்துப், பார்த்துகேட்டுக்கேட்டு,

அதிலேயே மனம் தளர்ந்து, உடைந்து போய், தன்னுடையவும், தன் நண்பருடையவும் பணம் எல்லாம் கரைந்து போன பிறகு, லாபமே கண்ணாகக் கருதும் வியாபாரத்தில் அமிழ்ந்துவிட்டது.

இந்தத் தொழில் வெளிநாட்டிலிருந்து வரும் ஓவல்டின், மால்ட் வகையறாக்களின் இடத்தை நிரப்பி, நம் செல்வத்தை இங்கேயே நிலைக்கச் செய்யக்கூடிய தொழில் ரீதியில் நடப்பதற்கு இல்லாமல் போய் விட்டது.

நமது மாகாணத்தில் மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டு அதன் மூலம் நமது இரத்தம் போன்ற செல்வத்தை பெருத்த அளவில் வெளிநாடு களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இதைத் தடுப்ப தற்காக வேண்டி, ஒரு டீசல் பாக்டரி நம் மாகாணத்தில் ஏற்படுத்தி, அதை உபயோகப்படும்படி செய்திருக்கும் பக்ஷத்தில், வருஷத்தில் இந்த மாகாணத்தில் மட்டிலும் ஐந்து அல்லது ஆறு கோடி ரூபாய் மீதப்படுத்தலாம். ஆனால் இதற்குப் பதிலாக, நேஷனாலிசேஷன் என்கிற பேரில் அஸ்திவாரம் ஒன்றுமில்லாமல் பஸ் சர்வீஸ்களை அரசாங்கத்தின் உரிமையாக்கி நமது இரத்தத்தை இன்னும் பெரிய பம்ப்புகள் வைத்து வெளியில் அடித்துத் தள்ளிக் கொண்டிருக்கின்றார்கள்.

மோட்டார் சர்வீஸ்களை அரசாங்க உடமையாக்க வேண்டாமென்று சொல்ல நான் வரவில்லை. உடமை யாக்கத் தகுந்த சாதனங்களை உற்பத்தி செய்து கொண்ட பின்பு அல்லவா செய்யவேண்டும். அவ்வித அஸ்திவாரங்களோடு செய்து நடத்தும் பக்ஷத்தில், இதனோடு இன்னும் இரண்டொரு சிக்கன முறைகளால் வரும் ஊதியத்தைக் கொண்டே ஒவ்வொரு மாகாணத் தையும், ஒவ்வொரு முனிசிபாலிடியையும், ஒவ்வொரு பஞ்சாயத்து போர்டையும், வேறு வரிகள் இன்றியே

நடத்த முடியும் என நம்புகிறேன். இந்த முறைகளையே நமது பெரியார் வரியின்றி அரசாங்கம் நடத்த முடியுமென்று சொன்னதின் உண்மை. அது எவ்விதம் என்பதை விவரித்துச் சொல்ல எனக்கு இங்கு காலம் போதாது.

உதாரணமாக, சென்னையிலுள்ள டிராம்வே சர்வீஸானது பொருளாதார விஞ்ஞானிகள் கணக்குப்படி புஸ்தகங்களில் நஷ்டம் காட்டுவதாக இருந்தாலும், மற்ற வாகனங்களைப் போல் இரண்டு வருஷம், நான்கு வருஷங்களில் தேய்ந்துபோய் அடிக்கடி நம் பணத்தை வெளி தேசங்களுக்கு அனுப்பி மோட்டார் வாகனங்கள் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த டிராம்கள் இருபது வருஷங்களும், அதற்கு மேலும் இரு மடங்கு வரை வேலை செய்யக்கூடியவை. இதற்குப் பதில் மோட்டார் வாகனங்களைக் கொண்டு நடத்தும் பக்ஷத்தில் அடிக்கடி வாகனங்கள் மாற்றும் செலவுமன்றி அதைவிட அநேக மடங்கு ஒவ்வொரு வருஷமும் அதை நடத்தும் விஷயமாக மிகப் பெருந் துகைகள் நம் நாட்டைவிட்டு வெளியேறி விடுகின்றது.

டிராம் சர்வீஸ் நடத்தும் பட்சத்தில் அந்த வாகனங்கள் இங்கேயே செய்யக்கூடியவை. அதற்கு வேண்டிய மரமும், இரும்பும் இங்கேயே உற்பத்தி ஆகின்றது. அதை நடத்துவதற்கு வெளிநாட்டிலிருந்து வரும் பெட்ரோலும், எண்ணெயும் வேண்டியதில்லை. இதை நடத்த எலெக்ட்டிரிக் கரண்டுதான் தேவை. இந்தக் கரண்டை உற்பத்தி செய்வது இங்கே தோண்டி எடுக்கும் நிலக்கரியாலும், ஏற்கனவே இருக்கும் நீர் விழ்ச்சிகளாலும்தான். இந்த டிராம்வே ஒவ்வொரு வருஷமும் வெளியேறும் செல்வத்தின் ஒரு பகுதியை நம் நாட்டிலேயே நிலைக்கச் செய்கிறது.

இந்தக் காரணத்தால் டிராம் சர்வீஸ் புறக்கணிக்கப் பட்டதைப்பற்றி பெரியார் வெகு வன்மையாகக் கண்டித்

திருக்கிறார். ஆனால், மற்ற சில பத்திரிகைகள்-அதிக சப்தத்தினாலும் வீதிகளில் டிராம் ஓடுவது பார்ப்பதற்கு அழகாயில்லை என்பதாலும் இவை கூடாது என்று கண்டிக்கிறார்கள். பெரியாருடைய அபிப்பிராயப்படி பொது மக்களில் பெரும்பாலோருக்கு அனுகூலமாயிருப்பதாலும், நம் செல்வத்தை வெளியேற்றாதிருப்பதாலும், மிகச் சிலருடைய சவுகரியத்தை கவனிக்காமல், இதை நடத்தியே தீரவேண்டும் என்று பெரியார் கூறியிருக்கிறார். இதையறிந்தே இப்போது கார்ப்பரேஷனும் அரசாங்கத்தின் உதவியோடு நடத்த தீர்மானித்திருப்பதை எல்லோரும் வரவேற்க வேண்டியதே.

பெரியார் சொல்லிவந்த இடங்களில்கூட இம்மாதிரி விஷயங்களை விளக்கமாகக்கூற சூழ்நிலையும், காலமும் அவருக்குக் கிடைக்கவில்லை. இவற்றை அரை மணி அல்லது ஒரு மணி நேரத்தில் சொல்லக் கூடியவையல்ல. இவ்விஷயங்களை நான் பலமுறை, பல நாட்கள், பல மணி நேரம் மேலிடத்திலுள்ள அதிகாரிகளிடம் விவரித்தும்கூட இன்னும் பயனளிக்கவில்லை.

பெரியார் ஏன் வடநாட்டிலிருந்து தென்னாடு பிரிய வேண்டுமென்றும், ஜாதி மதங்கள் ஒழிய வேண்டுமென்றும் சொல்லுகிறார் என்பதை நான் இங்கு விளக்க வேண்டியதில்லை. திராவிட கழகமும், திராவிட முன்னேற்ற கழகமும், இன்னும் மற்றவர்களும்கூட எல்லாவிடங்களிலும் விளக்கிச் சொல்லி வருகின்றார்கள் இவர்கள் எல்லாரும் எல்லாவிடங்களிலும் சொன்ன காரணங்கள் முழுவதையும் எடுத்துக் கொண்டால், இன்னும் சொல்ல வேண்டியவற்றில் பத்திலொரு பங்குதான் சொல்லியிருப்பார்கள். இன்னும் பத்தில் ஒன்பது பங்கு இனிமேல் சொல்லுவார்கள். அவர்களுக்கும் தெரியாமலிருப்பது இன்னும் ஒரு பத்து மடங்கு இருக்குமென்று நம்புகிறேன்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு தென்னாடு பிரியவேண்டுமென்று எவ்வளவு தூரம் பெரியார் உணர்ந்திருந்தாரோ, அந்த உணர்ச்சி இப்போதுதான் காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள்கூட உணர்ந்திருக்கிறார்கள்; இதை சிறிதளவாவது உணர்ந்த திரு ராஜாஜியும், திரு கிருஷ்ணமாச்சாரியும்கூட ஒன்றும் செய்ய முடியவில்லை. தென்னாடு ஏன் பிரியவேண்டுமென்ற முழு நுட்பங்களை, பெரியார் அறிந்த அளவு காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களும் மற்றவர்களும் அறிந்து கொள்ள நெடுங்காலம் பிடிக்கும். எனவே, நம் மாகாண ஆட்சியாரும் இன்னும் அதிக உணர்ச்சியோடு தென்னாட்டை எல்லாத் துறைகளிலும் இனிமேலாவது முன்னேற்ற முயற்சிப்பார்கள் என்று கருதுகிறேன்.

தென்னாடு புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை வட நாட்டிலுள்ள பொது ஜனங்களும்கூட இன்று அறிந்திருக்கின்றார்கள். இம்மாதிரி அரசாங்கம் தெரிந்தும் தெரியாமலும் செய்து வரும் நடவடிக்கைகள் பாரபட்சமாகப்படுவதால் மற்ற பாகத்தில் இருப்பவர்களும்கூட மேற்கிந்தியா, வட மேற்கிந்தியா, கிழக்கிந்தியா, வடகிழக்கிந்தியா, தென்னிந்தியா, மத்திய இந்தியா என்ற ரீதியில் பிரிய வேண்டும் என்ற கொள்கையை நாட்டிலுள்ள எல்லாருடைய மனத்திலும் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம்; மிக தூரத்திலிருக்கும் டில்லி சர்க்கார், இந்தியாவின் எதிர்காலத்தை சரியான வழியில் செலுத்தாததும், அதிலும் தென்னிந்தியாவின் நலனைப் புறக்கணித்து வந்ததுமேயாகும். இப்பொழுது இருக்கும் நம் முதன் மந்திரி இந்தக் குறைகளை நீக்க, நம் நாட்டிலுள்ள எல்லாக் கட்சிகளுடைய ஒற்றுமையையும், பலத்தையும் சேர்த்துக்கொண்டு இப்போதாவது நமக்கு வேண்டியதை செய்வார் என்று எண்ணுவோம்.

இம்மாதிரி பெரியார் சொல்லும் திட்டங்களை மற்ற தலைவர்கள் யாரும் சொல்லவில்லை என்று நான் குறை

கூறுவதில்லை. பல தடவைகளில் பல இடங்களில் சொல்லிக்கொண்டுதான் வருகிறார்கள். ஆனால் செயலில் முழுதும் மாறுபட்டே நடக்கிறது. இதனால் தான் இந்நாடு தனியாகப் பிரியவேண்டும். பிரியும் பட்சத்தில் நம் நாட்டிலிருக்கும் தலைவர்களால் உடனடி யாக நினைக்கிறபடி செயலில் செய்ய முடியுமென்று பெரியார் வற்புறுத்துகிறார்.

இந்த வருடத்தில் பதினோராயிரம் வாகனங்களுக்கும், 480 ரயில் பெட்டிகளுக்கும் ஆர்டர் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால், 500 வாகன்கள் மாத்திரம் இந்தியாவில் செய்யப்பட்டு வருகிறது. அதாவது பிரான்சு, பெல்ஜியம், இத்தாலி முதலிய நாடுகளி லிருந்து 12 கோடி ரூபாய்க்கு ரயில்வே சாதனங்கள் வாங்கப்படுகிறது. சென்ற ஆண்டில் 10,500 வாகனங் களுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டது. இதில் 6860 வாகன்களை இந்தியாவிலுள்ள கம்பெனியார்கள் தயாரித்திருக்கிறார்கள். இது தவிர, 9,75,000 பவுன் செலவில், அதாவது ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து 50 மின்சார ரயில்வே பெட்டிகள் இத்தாலியி லிருந்து வாங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இவற்றை கொஞ்சம் தாமதமானாலும் ஏன் இங்கேயே செய்யக் கூடாது? சென்ற வருஷம் அவ்வளவு தொகைக்கு இந்தியாவிலேயே செய்திருக்க இந்த வருஷம் மாத்திரம் ஏன் இங்கே செய்வது குறைக்கப்பட்டிருக்கிறது? இவற்றையெல்லாம் இங்கேயே செய்யும்படியாகப் பெரியார் வற்புறுத்துகிறார்.

கல்வித் திட்டம் சர்க்கார் பிரசார சாதானமாகத் தான் அமையும் என்று ஆசார்யா வினோபாவே கூறு கிறார். கல்விக்காக திட்டக் கமிஷன் 35 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்க, இப்போது 45 கோடி ரூபாய் வேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது. இதில் 7 கோடி ரூபாய் கலாசாலைக்குள் வருமுன்னேயுள்ள படிப்புக்கும், 5

கோடி ரூபாய் கலாசாலைப் படிப்புக்கும், 6 கோடி ரூபாய் தொழில் கல்விக்கும் இப்படி பிச்சை கொடுக்கிற மாதிரி ஒதுக்குகிறார்கள்.

அதோடு எட்டு நிபுணர்கள் சேர்ந்து, இப்போது இருக்கும் மத்திய அரசாங்கக் கல்வித் திட்டம் தற்கொலைக்கு ஒப்பாகும் என்று அறிக்கையும் வெளியிட்டிருக்கிறார்கள். எல்லோரும் ஒப்புக் கொண்ட கல்வித் திட்டம் இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தில் இருக்கிறது என்று நமது நிதி மந்திரி சொல்லுகிறார். ஆனால் இதே சமயத்தில் எல்லா மாகாணத்திலும் கல்விப் புரட்சி நடந்து கொண்டிருக்கிறது.

இம்மாதிரிக் குழப்பமான கொள்கைகளுக்கிடையில் மிக அவசரப்பட்டு இந்தி பாஷையை அனாவசியமாக மிக அதிக செலவில் ரயில்வே ஸ்டேஷன் முதலிய இடங்களிலுள்ள போர்டுகளில் முதல் வரியில் இந்தி பெயர்களை எழுதியிருக்கிறார்கள். ஒரு சமயம் முதல் வரியில் அந்தந்த பிரதேச பாஷையிலிருந்தாலும்கூட இவ்வளவு வெறுப்பு ஜனங்கள் அடைந்திருக்க மாட்டார்கள். இன்னும் அதிக வெறுப்புக்கு இடம் கொடுக்கும் மாதிரியில் போஸ்டு கார்டு, ஸ்டாம்பு, சீல் முதலியவைகளில் இந்தியில் மட்டிலும் அல்லது இந்தி இங்கிலீஷ் மட்டிலும் அச்சடித்து மக்களுக்கு இன்னும் வெறுப்பை உண்டாக்கி வருகிறார்கள். இது தவிர கல்விச் சாலைகளிலும் இந்தியை கட்டாய பாடமாகப் புகுத்தினார்கள். ஆனால் இன்று பெரியாருடைய கிளர்ச்சியினாலும் மற்ற எல்லா பொதுமக்களும் அவருடைய கிளர்ச்சிக்குஆதரவுகொடுத்தாலும் இந்தக்கட்டாய பாடத்தை நிருத்தி ஆச்சாரியார் கொண்டு வந்த முரண்பட்ட கல்வித் திட்டத்தையும் தள்ளிவிட்டு பெரியாருடைய முயற்சியால் இன்றுள்ள ஒரு குழப்ப நிலை மாறியிருக்கிறது. நம் பிரதம மந்திரி நேருவுக்கும், மற்ற தலைவர்களுக்கும் இது தெரியாத

தன்று. இந்தக் குறைகள் உண்டானதற்கும், பெருகிய தற்கும் காரணம் அரசாங்கத்திலும் அரசாங்க கட்சி களிலும் உள்ள உட்பிளவும், பலவீனமுமேயாகும்

இந்தியாவின் ஜனத்தொகை இன்னும் 27 வருஷத் தில் ஐம்பத்தோரு கோடியே பத்து லக்ஷத்திற்கும் உயரும் என்று அமெரிக்க நிபுணர்கள் கணித்திருக்கிறார் கள். அதே அளவில் உணவு உற்பத்தி ஒருக்காலும் உயரவே முடியாது. ஆகையால் உணவு இறக்குமதி செய்யவேண்டிய நிலைமையில்தான் எப்போதும் இந்தியா இருக்க நேரிடும் என்றும் சொல்லுகிறார்கள்.

இந்தியாவில் குடிசைத் தொழில்கள் எம்மாதிரி வகைகளில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று அமெரிக்க நிபுணர்கள் இங்கு வந்து யோசனை கூறியிருக்கிறார்கள். மற்றத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு முன்பு அதிக இரும்பு உற்பத்திக்கும், தாமோதர் நதி பள்ளத்தாக்கு அணைக்கட்டு வேலையை முதலில் கட்டியாக வேண்டு மென்றும், மற்ற எல்லாவற்றிற்கும் முதலில் பெரிய இயந்திரங்களை செய்யும் உற்பத்திசாலை வேண்டு மென்றும், அமெரிக்கா, பிரான்சு, ஸ்விட்ஜர்லாந்து இங்கிலாந்து முதலிய இடங்களிலிருந்து இதற்காக, அழைக்கப்பட்டு வந்தவர்கள் யோசனை கூறு கின்றார்கள்.

நம் தேசத்திலேயே அதிமேதாவிகள் இருக்கின்றார் கள். ஜனத்தொகையை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதைக்கூற பேராசிரியர் சந்திரசேகரனும், குடிசைத் தொழில்களையும், பெருந் தொழில்களையும் எவ்வளவு பரவலாக பல இடங்களில் செய்ய வேண்டுமென்று கூற சர். எம். விஸ்வேஸ்வரய்யாவும், முன்னால் செய்ய வேண்டியதை முன்பும், பின்னால் செய்ய வேண்டியதைப் பின்னும் செய்ய வேண்டுமென்று வற்புறுத்த சர். சி. வி. ராமனும், திருவாங்கூரிலும் இங்கும், மின்சாரம்,

அலுமினியம் செயற்கை எரு முதலிய நம் நாட்டுக்கு உடனடியாக வேண்டிய தேவைகளை செய்கையில் நிரூபித்துக் காண்பித்த சர். சி. பி. ராமசாமி அய்யரும், யுத்த காலத்தில் ஏற்பட்ட வரிகளை உடனடியாக நீக்கி, முன்னிருந்தவற்றையும்கூட ஒழித்து அரசியல் நடத்தப் பட வேண்டுமென்று யோசனை கூற நமது பெரியாரும், நம் நாட்டு நாணய முறைகளை நாமே அமைக்க வேண்டுமென்று கூற ஸ்ரீ ஜான் மத்தாயும், இந்தியாவில் முன்புள்ள வைத்திய முறைகளைத் திருத்தி அமைக்க வழிகாட்டும் டாக்டர் குருசாமியும், இப்பொழுது வேண்டிய கல்வியைப்பற்றி வெகு நுட்பமாக ஆராய்ந்து யோசனைகூற டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியாரும், டாக்டர் அழகப்ப செட்டியாரும், இரசாயனப் பொள்களையும், இயந்திரத் தொழில்களில் எவை அவசியம் உடனடியாக வேண்டும் என்று கூற சர் லாலா ஸ்ரீராமும், இரும்புத் தொழிலில் வேண்டிய யோசனை களை கூற நிபுணத்துவம் பெற்ற டாட்டா ஸ்தாபனமும் இருக்க, ''எவ்வளவு நல்ல மாடானாலும் உள்ளூரில் விலை போகாது'' என்ற பழமொழிக்கிணங்க இவர்கள் யோசனைகள் முழுவதையும் கேட்காமலோ, கேட்டு அங்கீகரிக்காமலோ ஒவ்வொன்றுக்கும் அயல் நாட்டு மேதாவிகளைக் கூப்பிட்டு அல்லது வேறு திறமையில் லாதவர்களைக் கொண்டே யோசனை கேட்டுக் கொண்டே நம் காலத்தையும், செல்வத்தையும் கரைத் துக் கொண்டுதானிருக்கிறோம்.

நமது மாகாணத்தில் இந்து மத பரிபாலனத்திற்குச் சம்பந்தப்பட்ட 27,541 கோவில்களும், 288 மடங் களும் உள்ளன. இது தவிர, பலவிதமான தர்ம சத்திரங் களும் இருக்கின்றன. இந்த கோவில்களில் 7,800 கோவில்கள் மட்டிலும் ஆபரணங்களிலும், வாகனங்களி லுமுள்ளள மதிப்பு 4 கோடியே 40 லக்ஷத்திற்குமேல் இருக்கிறது. ஸ்ரீரங்கம், மதுரை முதலிய 4 கோவில் களில் மட்டிலும் இதில் மூன்றில் ஒரு பங்கு தொகைக்கு

ஆபரண வகையறா இருக்கின்றன. இது போக ஏராள மான நிலங்களும் இருக்கின்றன. ஏராளமான கட்டடங் களும் உபயோகமின்றி இருக்கின்றன.

பெரியார் ஏதோ ஒரு கொள்கைக்காக இவைகளைப் பற்றிக் கேட்கிறார் என்று வைத்துக் கொண்டாலுங்கூட அவர் சொல்லுகிறபடி பகுத்தறிவைக் கொண்டு நாமே யோசித்துப் பார்க்கும்போது, இவற்றால் என்ன பிரயோசனம் அடைந்தோம், இனி என்ன அடையப் போகின்றோம் என்ற இந்த விஷயம் யாருக்கும் தெரியாமல் போகாது. இன்றாவது பகுத்தறிவு என்று ஒன்று இருப்பதை, கல்வியறிவு இல்லாத பாமரமக்களுக் கும் தெரிய வைத்தது பெரியார்தான்.

இப்போது வியாபாரம் மந்தமாயிருக்கிறது. தோல், காபி, டீ, புகையிலை, கடலை, கடலை எண்ணெய், ஓடு, மரம் இவைகளின் விலை இறங்கி வருகிறது. இங்கு ஒரு தொழிற்சாலை மூடப்படுகின்றது, அங்கு ஒரு மில் மூடப்படுகிறது என்ற மூடுவிழாக்களும், காலேஜுகளில் உதவாக்கறை கல்வியைக் கொடுத்து சர்டிபிகேட்டு களும், டிப்ளமோக்களும், டிகிரிகளும் கொடுத்து அனுப்பப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. அதனால் வேலையில்லாத் திண்டாட்ட ரிஜிஸ்டரில் எண்ணிக்கை உயர்ந்துகொண்டும் வருகிறது. இதற்குக் காரணம் என்ன என்று யாராவது யோசித்தார் களா அல்லது கண்டுபிடித்தார்களா?

இவை இப்படி இருக்க இந்தியாவுக்கும், பிரிட்டனுக் கும் ஏப்ரல் மாதத்தில் மட்டும் நடந்த வர்த்தகத்தில் நாம் இறக்குமதி செய்த மதிப்பு 89 லக்ஷம் பவுன். ஏற்றுமதி மதிப்பு 90 லக்ஷம் பவுன். தேயிலை மட்டும் 1, 24, 000 அந்த ஏற்றுமதியும், சணல் கோணிப்பை வகையறா 15 லக்ஷம் பவுனுக்கும், தோல் வகையறாக்கள் 10 லக்ஷம் பவுனுக்கும், புகையிலை 35 லக்ஷம் ராத்தலும்

ஆட்டு மயிர் 2 லக்ஷத்து 67 ஆயிரம் பவுனுக்கும், 2,60,000 பவுன் மதிப்புள்ள பஞ்சும் ஏற்றுமதி செய்திருக்கிறோம்.

ஆனால், நாம் இறக்குமதி செய்திருப்பது என்ன? மின்சார இயந்திரங்கள் 11 லக்ஷம் பவுன், ஜவுளி உற்பத்தி இயந்திரங்கள் 6 லக்ஷம் பவுன், பாய்லர்கள், ட்ராக்டர்கள் முதலியவை 24 லக்ஷம் பவுன், ரயில் வாகன்கள் 2 லக்ஷத்து 90 ஆயிரம் பவுன், சாயங்கள் 11 லக்ஷம் பவுன் ஆக இவ்வளவையும் இந்தியாவில் இறக்குமதி செய்திருக்கிறோம்.

ஏதோ விலைகள் காரணமாகவோ, விரோத மனப்பான்மை காரணமாகவோ, யுத்தம் காரணமாகவோ இந்த இறக்குமதியும், இந்த ஏற்றுமதியும் தடைப்பட்டு விட்டது என்ற நிலைமை ஏற்படுமானால், நமது வியாபாரம், நமது உற்பத்திகள் எந்த நிலைமையில் இருக்குமென்பதை சற்று யோசித்துப் பாருங்கள். தாதுப் பொருள்கள் மூலப்பொருள்கள் ஏற்றுமதி என்னவாகும்? அவை சம்பந்தப்பட்ட தொழில்கள் எவ்வளவு தூரம் நடைபெறும்? இன்னமும் இன்றுவரை உருக்கு, இரும்பு இயந்திர சாதனங்கள் இறக்குமதியே செய்து கொண்டிருக்கும்போது அவற்றால் நடக்கும் தொழில்கள் என்ன நிலைமையில் இருக்கும்? இவற்றில் வியாபார மந்தம் எவ்வளவு தலைதூக்கி இருக்கும். வேலையில்லாத் திண்டாட்டம் எவ்வளவு தூரம் உச்சநிலைக்கு வரும் என்பதையும் யோசித்துப் பாருங்கள்.

இந்தக் கஷ்டங்களை நீக்குவதற்கு அல்லவா ஒரு வருஷ திட்டமோ, ஐந்து வருஷ திட்டமோ, பத்து வருஷ திட்டமோ தயார் செய்திருக்க வேண்டும்? அதை விட்டுவிட்டு இப்போது இருக்கும் திட்டங்கள் இந்தக் கஷ்டங்களை அதிகரிக்கவும் வரி விகிதங்களை உயர்த்தவும், ஏற்கனவே நம்மேல் இருக்கும் கடன்களை ஒழிப்ப

தற்கு பதில், இன்னும் கடன் வாங்குவதிலேயே அரசியல் சார்ந்து நிற்க வேண்டிய நிலைமைக்கு திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஏதோ சிறிது தொழில் முன்னேற்றமும், விவசாய முன்னேற்றமும் இயற்கையாக நடைமுறையில் நமது அரசியலும் பொது மக்களும் செய்திருக்கிறார்கள் என்பதை நாம் வரவேற்கிறோம். ஆனால் இந்த முன்னேற்றம் இந்த திட்டத்தினால் வந்ததல்ல என்பதை வருத்தத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணங்கள் அனுபவத்தில் பழுத்துள்ள ஆச்சார்யா கிருபளானி சொல்லுகின்ற மாதிரி வகுத்த திட்டங்களிலும், நடைமுறையில் நடந்து வருபவற்றிலும் எந்தக் குறிக்கோளும் இல்லாமல் போய்க் கொண்டிருப்பதுதான். இதையேதான் பெரியாரும், இவர்கள் எல்லோரும் சொல்வதற்கு முன்பே நமது பாஷையில் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார். சொன்ன மொழிகள் மட்டும் வித்தியாசமே தவிர விஷயம் ஒன்றுதான். மேடைகளில் பெரியாரை எதிர்த்து பிரசங்கங்கள் செய்தாலும்கூட, ஒவ்வொரு கட்சிக் காரர்களும் அவர் வகுத்த முறையைத்தான் வெவ்வேறு வழிகளில் செய்து வருகிறார்கள்.

மொழிவாரியாக நாடு பிரிய வேண்டுமென்பதும் ஆட்சி சௌகரியத்துக்காக சில பகுதிகள் பிரியவேண்டும் என்று நான் சொல்வதும், மத்திய அரசாங்கம் எல்லாம் தம்முடைய ஆட்சியிலேயே இருக்க வேண்டுமென்று சொல்வதும், காலையில் ஆபீசை திறந்து கூட்டுகிறவன் முதல் சகலரும் தமது ஆதிக்கத்திலேயே எல்லாம் இருக்க வேண்டுமென்று சொல்வதும், ஆகிய இவ்விஷயங்கள் மக்கள் மனதில் பட்டதற்கு அடிப்படைக் காரணமென்ன! மத்திய அரசாங்கத்தார் தமக்கே எல்லாம் வேண்டுமென்பதற்கு அனுபவ பழக்கமின்மையும் முன்னே சொன்னபடி அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பாரபக்ஷமாயிருப்பதுதான். தவிர இன்னும் ஆட்சியில் மிகச் சிறந்த பண்புள்ள தலைவர்கள் இருந்தாலும், பணம்,

அதிகாரம் என்ற நோய் பிடித்தவர்களின் ஆதிக்கம் அதிகம் பரவியிருப்பதால்தான். இதை யாரும் மறுக்க முடியாது. எல்லாம் ஒன்றாகவே கூடி பலமுள்ளதாகவே இருக்கவேண்டும் என்கிற உயர்ந்த நோக்கம் சிலரிடத்திருப்பது வெறும் கனவு.

முனிசிபாலிட்டியோ, பஞ்சாயத்து ஜில்லா போர்டோ, மாகாண அரசாங்கமோ, தம்முடைய காரியங்களில் சுதந்திரம் இருக்கவேண்டுமென்றும், இந்த சுதந்திரத்தை இன்னொருவர் அபகரித்துக் கொள்ளக் கூடாது என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் பல்வேறு வகைகளில் பாஷாவாரியாக நாடு பிரியவேண்டும் என்றும் அதே சமயத்தில் நாடு பிரிந்தால் நாம் அழிந்து விடுவோம், கெட்டு விடுவோம், பகைவர்களுக்கு அடங்க வேண்டியதாக ஏற்படும் என்றும் பயமுறுத்துகிறார்கள். ஆனால் எல்லா அதிகாரங்களையும் தங்களிடத்திலேயே இருக்கவேண்டும் என்கிற அவர்கள் தத்துவம்தான் நமக்கு விளங்கவில்லை. இந்த முரண்பாடுகளைப் பார்க்கும்போது தென்னாடு பிரிய வேண்டுமென்று பெரியார் சொல்லுவதை, நாமும் நம் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால், அவற்றை அடைய எல்லாம் ஒருங்கு சேரவேண்டிய காலம் வெகு அருகாமையில் வந்துவிட்டது என்பது விளங்கும்.

தொழில்களுக்கு இப்போது உண்டாக்கி இருக்கும் [illegible]யாதிகளால், வேலையில்லாத் தொழிலாளர்களின் [illegible]ண்ணிக்கை இன்னும் பெருகத்தான் போகிறது. அவ்விதம் பெருகும்போது, எந்தக் கட்டுப்பாட்டுக்கும் எதுவும் அடங்கி இருக்க முடியாத நிலை வரும். முதலில் அதைத் தவிர்ப்பதற்காகவே, மிகக் குறுகிய காலத்தில் நமது மாகாணத்திலுள்ள எல்லாக் கட்சிகளும் ஒருங்கு சேரப் போகிறது. எந்த ஒரு தனிக் கட்சியாலும் நமது

மாகாணத்தின் தேவையை, இன்று இருக்கும் நிலையில் சரிகட்ட முடியாது என்பதை அதி விரைவில் இங்குள்ள ஒவ்வொரு கட்சியும், பொது ஜனங்களும் அறிந்து கொள்ளப் போகிறார்கள். இதைத்தான் பெரியார் அநேக வருடங்களுக்கு முன்பிருந்தே ஜோசியம் போல் சொல்லி, சொன்னபடி நடந்து வருவதையும் நிரூபித்துக் காட்டிக் கொண்டு வருகிறார்.

திருவாளர் V. T. கிருஷ்ணமாச்சாரி திட்டக் கமிஷனைப்பற்றி சொல்லுகிறார் :—முதலாவது ஐந்து வருடத் திட்டத்தில் ஐந்து சதவீதம் தான் லக்ஷியம் அடையமுடியும். கடினமாக உழைத்தால், இருபது வருடங்களுக்குப்பின் ஒவ்வொருவ்ரின் வருமானம் இரு மடங்காகும். இதற்கே நிதி மந்திரி 25 வருடம் ஆகும் என்றும் சொல்லுகிறார். இன்று இருக்கும் செலவுகளின் நிலையில் இருமடங்கு வருமானமாவதற்கு2, 20 வருடம், 25 வருடம் ஆகும் பக்ஷத்தில் அதற்குள்ளாகவே பற்றாக் குறைஉணவாலும்,வேலையில்லாத்திண்டாட்டத்தாலும் அநேகம் பேர் இறந்து விடுவார்கள். அவ்விதம் ஒரு பாதி மக்களாவது இறந்து போகும் பக்ஷத்தில், தானாக பாக்கி இருப்பவர்களுக்கு வருமானம் இரண்டு மட ஆகிவிடுகிறது. இதற்கு இவ்வளவு கஷ்டப்ப திட்டம் போட வேண்டுமா?

திராவிடநாடு வேண்டுமென்பது தமிழ்நாடு மட்டுமல்ல. மலையாளம், கன்னடம், ஆந்திரா, மைசூர், திருவாங்கூர், கொச்சி, ஐதராபாத்தும்கூட சேர்ந்தே திராவிடநாடாகலாம். மற்றவர்கள் திராவிடநாட்டோடு சேராவிட்டாலும், தமிழ்நாடு மட்டும் இருந்தாலும் சரி என்று சொல்லுகிறார்கள். திராவிடநாடு பாஷையையும், ஜாதியையும் பொறுத்ததல்ல. தென்னாடு என்பதும், திராவிடநாடு என்பதும் இந்தசென்னைமாகாணத்தையே குறிக்கும்; விவசாயம், வியாபாரம், கல்வி, தொழில் இவைகளில் தென்னாடு சுதந்திரம் அடையவேண்டும்.

எல்லாரும் அதில் பங்கு கொள்ள வேண்டும். ஒரு சிலர் மட்டும் சவுகரியங்களை அடித்துக்கொண்டு போகாமலிருக்கவேண்டுமென்பதற்காகத்தான் திராவிட நாடு பிரியவேண்டும் என்று பெரியார் சொல்லுகிறார்.

இதன்றி, வைதீகம், ஜாதி, மதம், ஒழியவேண்டுமென்று சொன்ன பெரியார் இன்று ஒரு சாதியாரை வெளியேற வேண்டுமென்றும் சொல்லுகிறார். இதற்குக் காரணம் என்ன?

ஜாதியத்தை ஒழிப்பதற்குப் பதில் ஒரு ஜாதிக் காரஸரயே வெளியேறும்படி சொல்லுவதை சிலகாரணங்களால் நான் ஒத்துக்கொள்ள முடியவில்லை. நெருப்பு மிகச் சூடுடையது, பனிக்கட்டி மிகக் குளிர்ச்சியுடையது. மற்றவை சாதாரணமாக பலதரப்பட்ட சீதோஷ்ண குண வேறுபாடுகள் உடையன. இவை ஒவ்வொன்றும் வேண்டிய இடத்தில், வேண்டிய அளவுக்கு சேர்ந்தாலொழிய எவரும் முழுப் பயனை அடைய முடியாதென்பது நான் சொல்லத் தேவையில்லை. பிராமணர்களை வேண்டாமென்று சொல்லுவோமானால், அவர்களில் அநேகர் உண்மையாகவே பொது நன்மைக்கு பாடுபட்டு வந்திருக்கிறார்கள். அவர்களில் சில பேர் நிபுணர்களாக இருந்து பொதுமக்களுக்கு உதவக்கூடிய அநேக நற்காரியங்களைச் செய்திருக்கின்றார்கள். உதாரணமாக, சர் எம். விஸ்வேஸ்வரய்யா, சர் சி. வி. ராமன், சர் சி. பி. ராமசாமி ஐயர் இவர்களைப்போன்ற பிராமணர்களால் நம் நாட்டுக்கு ஒரு நன்மையும் வரவில்லை என்று யாராகிலும் சொல்லமுடியுமா? இவர்களை வெளியே போகும்படி பெரியார் சொல்லவில்லை.

ஆனால் எங்கோ மிகச் சிலபேர் கெடுதல்கள் செய்திருக்கலாம். பிறருடைய சொத்தோ, தேசத்தினுடைய சொத்தோ 1000 ரூபாய் போனாலும் போகட்டும், தனக்கு ஒரு ரூபாய் லாபம் வந்தால்

போதும் என்று இருப்பவர்களையும், மற்ற ஜாதிக்காரர்கள் எக்கேடு கெட்டாலும் சரி என்று நினைத்து அவர்களை அடியோடு கெடுத்து, தானும், தன்னைச் சேர்ந்தவர்களும் மேலே ஏறும்படியான திட்டமிடுபவர்களையும், அறியாமையில் மூழ்கியிருக்கும் பொது மக்களை ஏமாற்றி வாழ்பவர்களையும்தான்-பிராமணன் ஆனாலும் சரி - வடநாட்டானானாலும் சரி—வெளியே போகவேண்டுமென்று சொல்லுகிறார். இந்நாட்டிலுள்ள எவரும் இம்மாதிரி காரியம் செய்தால் அவர்களையும்கூட வெளியேறத்தான் சொல்லுகிறார்கள்.

சில வருஷங்களுக்கு முன்பு வைதீகம் பரவியிருந்தபொழுது இது ஒழியவேண்டும் என்று சொன்னது சரிதான். ஆனால், இந்தத் தலைமுறையில் இருக்கும் இளைஞர்களிடம் வைதீகத்தால் வந்த வித்தியாசம் மறைந்து விட்டது.

மூடநம்பிக்கைகளால் வ்ளரும் வைதீகக் கொள்கைகளையும், ஜாதிப் பற்றுகளால் ஏற்படுகின்ற இன வேற்றுமைகளையும் உணரமுடியாத பாமர மக்க சுரண்டுவதை எல்லாரும் விட்டுவிட வேண்டுமெ அநேக வருஷங்களாகப் பெரியார் சொல்லி வந் ஆனால் விடுவதற்கு பதில்,வளர்ந்துகொண்டு வருவ பார்த்து பொருக்காமல் அப்பேர்ப்பட்டவர்கள் யேற வேண்டுமென்று சொல்லுகிறார். தவிர, சொல்வதை அப்படியே எடுத்துக் கொள்ளும்படியாகவும் சொல்லவில்லை. சரியாக இருந்தாலும் இருக்கலாம், தவறாக இருந்தாலும் இருக்கலாம். பொதுமக்களாகிய நீங்கள் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து, சிந்தித்துப் பார்த்து சரியென்றுபட்டால் எடுத்துக் கொள்ளுங்கள் என்றுதான் சொல்லுகிறார். அதைப் பார்க்கும்போது பிராமணர்கள் மட்டுமல்ல. மற்ற ஜாதியார்களும்கூட இந்தத் தவறுகளை சமயம் கிடைத்தபோது செய்துதான்

வருகிறார்கள்: இவ்வாறு செய்வதற்குக் காரணம் அரசியல் பலவீனமே ஒழிய வேறு ஒன்றும் இருக்க முடியாது. இவ்வித நிகழ்ச்சிகள் அரசியலால் தடுக்கப் படுமாயின், நாம் இப்பொழுது மொத்தமாக யாரை வேண்டாமென்று சொல்லுகிறோமோ, அவர்களுடைய ஒற்றுமையும் சேர்த்துக் கொண்டே பொது மக்களுக்கு அதிக நன்மையுண்டாக்க முடியும் என்பது என்னுடைய எண்ணம்.

பெரியார் சில நாட்களுக்கு முன்பும்கூட இதே எண்ணத்தைத்தான் வெளியிட்டிருக்கிறார். அதாவது காங்கிரஸ் கட்சியை எதிர்க்கட்சி என்று எண்ணிக் கொண்டாலும்கூட திருவாளர் காமராஜ் நாடாருக்கு சமீபத்தில் நடக்கவிருக்கும் சட்டசபை தேர்தலில் எதிர் பிரசாரம் செய்யக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். இதே மாதிரி ஆச்சாரியார், சில சட்டங்கள் கொண்டு வந்தபோது அதை ஆதரித்தும் இருக்கிறார். அப்பொழுது இருந்த அமைச்சரை, பிராமண ஜாதி என்றோ—இப்பொழுது இருப்பவர் பிராமணரல்லாதவர் களென்றோ வித்தியாசம் காட்டவில்லை. ஆனால், பாடுகிரஸ் கட்சியினரோ, கம்யூனிஸ்ட் கட்சியினரோ நிபுணம் காரியங்களில் தவறுகள் இருக்கும் பக்ஷத்தில் அடேவகளை அவர் கண்டிக்காது விட்டதுமில்லை. உதாவும் தன் கொள்கைகளை பின்பற்றுபவரிடத்தும் ராடி தவறுகள் நடந்து இருக்குமாயின் அவைகளையும் கண்டிக்கத் தவறியதில்லை.

பூதானக் கடவுள்களால் அநேக லக்ஷம் ஏக்கர் பூமிகள் பிரித்துக் கொடுப்பதற்கு கிடைத்திருக்கிறது, இவற்றைப் பிரித்துக் கொடுக்கும்போது சிறு சிறு துண்டுகளாக்கி ஏழைகளுக்கு கொடுக்கப்படும். அவர் களுக்கு விவசாயம் செய்ய கொள்முதல் இல்லாததால், உற்பத்திக் குறைவு ஏற்படுமே தவிர, இதனால் அதிக மாகப் போவதில்லை.

கொஞ்சம் நீங்கலாக, அநேக பூதானங்கள் வழங்கியவை, ஏராளமாக வைத்திருப்பவர்கள் தங்களிடமிருக்கும் உதவாக்கரை நிலங்களையும் தங்களுடையதல்லாததோ, வியாஜ்யத் தொடர்புடைய நிலங்களையோ, சர்க்காருக்கு கிஸ்திக்குக்கூட கட்ட வரும்படியில்லாத நிலங்களையோ பூதானங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். மற்றுள்ள அநேகர் அதிகமாக வைத்திருக்கும் நிலங்கள் பிரிவுபடாமல்தான் இருக்கிறது.

மயிலே, மயிலே, இறகு கொடு என்று கேட்டால் கொடுப்பதில்லையென்ற நினைப்போடு நிலச்சீர்திருத்தம் என்ற ஒரு திட்டத்தை உண்டாக்கி அதில் 30 முதல் 50 ஏக்கர் வரை நிலம் ஒருவன் வைத்திருக்கலாம், என்று சொல்லப்படுகிறது. இந்த முறை, எந்தப் பொருளாதாரத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டதோ தெரியவில்லை. ஒருவர் தன் 5ஏக்கர் நிலத்தையும்கூட ஒழுங்கு செய்து உணவு உற்பத்திப் பெருக்கத்தை செய்ய முடியாமலிருக்கிறார். அப்படிப்பட்டவருக்கு ஒரு ஏக்கர் இருந்துதான் பயன் என்ன? அநேக 1000ஏக்[illegible]மே கணக்கிலுள்ள நிலம் இருந்தாலுங்கூட முழுவதிலும் [illegible]ங்கு உற்பத்தி செய்யும் நிலையிலும் இருக்கிறார்கள். [illegible]ட்டு படி பிரிக்கப்படின் நிபுணத்துவமுடையவர்க[illegible] சக்தி வீணாக்கப்படுகிறது. இவ்விதம் பிரிக்[illegible]டிலு பொழுது எல்லோருக்கும் நிலம் கிடைக்கிறதா? அ[illegible] இல்லை. இந்த முறைகளால் நாட்டிற்கு ஒரு நன்மையு[illegible] வரப்போவதில்லை. இது விஷயங்களில் நிலச்சுவான்தார்களின் எதிர்ப்பும்கூட அதிகம் இல்லை. ஆனால் கையாளும் முறைகளைத்தான் எல்லாரும் குறை கூறுகிறார்கள்.

ஆனால், கலிபோர்னியாவிலும் மற்றும் சில தேசங்களிலும் செய்திருப்பதுபோல நம் தேசத்திற்கு உகந்த சிறுமாறுதலோடு கூட்டுறவு முறையில் சொந்தம் செய்து

வரும் பக்ஷத்தில் விவசாய உற்பத்தியும் பெருகும், எல்லோருக்கும் வருமானமும் அதிகம் கிடைக்கும் அரசாங்கத்திற்கும் தக்க ஊதியம் கிடைக்கும்.

இதே முறையில் அதாவது அநேக தொழில் ஸ்தாபனங்களையும்கூட மிகுந்த லாபம் கொடுக்கும்படி செய்யலாம். தொழில் செய்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்கு ஊதியம் உண்டு என்கிற நிலைமைக்கு கொண்டுவரும் பக்ஷத்தில் நம் நாட்டில் எந்தக் கட்சிகளுக்கும், எந்தப் புகார்களுக்கும் எந்த லஞ்சங்களுக்கும் தேவையே இருக்காது.

இவ்வித காரியங்களை கிராம பஞ்சாயத்துகளுக்கும், நகராண்மை கழகங்களுக்குமே விடும் பக்ஷத்தில். அங்கங்கே கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டே பொது மக்களுக்கு வேண்டிய எல்லா சவுகரியங்களையும் ஓரளவுக்கு ஒழுங்காக செய்து கொள்ள முடியும். இம்மாதிரி காரியங்களை செய்ய இந்நாடு சுதந்திரம் பெற்றால் ஒழிய, நிவர்த்தியில்லை என்பதைகண்கூடாகத் தெரிந்து, பெரியாரோடு மற்றக் கட்சியினரும் சேர்ந்து பிரசாரம் செய்து வருகின்றனர்.

கிராமங்களிலும், நகரங்களிலும் அநேக முறைகளில் பணத்தை சுரண்டி, ஏழைகளை இன்னும் ஏழைகளாக்கிக் கொண்டிருக்கும் அரசியல், இச்சுதந்திரத்தைக் கொடுக்கவா போகின்றது! கிராமங்களிலும் நகரங்களிலும் எந்த வரிகளாயினும் அங்கங்கே வேண்டியவற்றிற்கு உபயோகித்தது போக மிச்சமிருந்தால்தான் மாகாண அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் எடுத்துக் கொள்ளலாம் என்று நியதி ஏற்பட்டாலொழிய நம் நாட்டுக்கு நிவர்த்தியே கிடையாது.

ஆனால் நம்நாட்டில் எதற்கெடுத்தாலும் சட்டங்கள் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். நடைமுறையில் அநேக சட்டங்கள் பயன்படாதிருக்கின்றன; அப்படி

நடைமுறைக்கு வந்தாலும், மக்களுக்குத் தீங்குண்டாவதாக இருப்பதே தவிர, நலம் காணுவது குதிரைக் கொம்பாக இருக்கிறது.

இன்று விற்பனை வரி, வருமான வரி, புகையிலை வரி, தீக்குச்சி வரி, பஞ்சு வரி, உற்பத்தி வரி, உப்பு வரி, பர்மிட்டு வரி, மோட்டார் வரி இவற்றோடு எண்ணைவரி, ரோடுவரி, படிப்புவரி, கருப்பு மார்க்கெட்டும் சேர்ந்து உறிஞ்சுவதைப் பார்த்தால், ஒரேயடியாகப் பாலில் உள்ள ஆடை, வெண்ணை, இன்னும் கெட்டியாய் இருந்தால் அதையும் உறிஞ்சின பிறகு மீதியிருப்பது காற்றில் ஆவியாகும் தண்ணீர்தான். அப்படி மீதியிருக்கும் ஏழைகளிடமிருந்து கக்கூஸ்வரி, தண்ணீர் வரி, விளக்குவரி போன்ற காற்றாடிவரி புழுதிவரி முதலிய வரிகளை எடுத்துக் கொண்டுதான் நமது பஞ்சாயத்துகளும், நகரங்களும் அடிமைத் தொழில்கள் செய்துகொண்டிருக்க வேண்டியதாக இருக்கிறது.

இன்று ஒருவன் இந்நேரத்தில், ஒரு பலகா[illegible]க் கடையில் பக்ஷணம் சாப்பிட்டு, அணா கொடுத்து[illegible]ரில், [illegible]விட்டு வருவானேயானால், அந்தப் பக்ஷணங்களின் பே[illegible]ட வரிகளை நூறு அல்லது இருநூறு வகைகளுக்கு மேற்ப[illegible]ப்படி என்றால், கொடுத்துத்தான் வந்திருக்கிறான். எ[illegible]துமை, உளுந்து, சாப்பிட்ட பக்ஷணங்களில் அரிசி, கோ[illegible]லை எண்ணை, கடலை, எள் எண்ணை, நிலக்கட[illegible]த்தமல்லி, மிளகு, தேங்காய் எண்ணை, மிளகாய், கொ[illegible]காப்பிக்கொட்டை, வெந்தயம், உப்பு, தண்ணீர், விறகு, [illegible]லாம் இருக்கின்றன. தேயிலை, பால், தயிர் இவைகள் எ[illegible]றந்தது இவைகள் ஒவ்வொன்றுக்கும் கு[illegible] உற்பத்தியிடத்திலிருந்து சாப்பிட்டவன் நாக்கிற[illegible] வருகிற வரையில், பல முனைகளில் விற்பனை வரியோடு, இவைகளை நிலங்களில் உற்பத்தி செய்ய பாடுபட்டவர்களுக்கும், ஏற்றிக்கொண்டு போகும் வண்டி, மோட்டார்,

லாரி, ரயில் அவற்றில் வேலை செய்கின்றவர்களும், அந்தந்தத் தொழிலில் வந்த வருமானங்களுக்கு வரியும், வாங்கவும் விற்கவும் இருக்கின்றவர்களுக்கு ஏற்படும் வரியும், சாப்பிடும்படி பக்குவம் செய்தவர்கள் கொடுக்கும் வரிகளையும் சேர்த்துப் பார்த்தால், ஒரு காரவடையின் பேரில் நூறு அல்லது இரு நூறு வித வரிகளுக்குக் குறையாமல் இருக்கும் என்றால், வரியின்பளுவு எவ்வளவு என்று யோசித்துப் பாருங்கள்? இவ்வளவு வரியையும் ஏழை மக்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

ஆனால், ஒவ்வொருவரும் கிராம புனருத்தாரணம், கிராம சேவை இவைகள்தான் முதலில் செய்யப்பட வேண்டுமென்று சொல்லிக் கொண்டே, கிராமங்களை இன்னும் சிறு கிராமங்களாக்குவதற்கும், நகரங்களை இன்னும் பெரிய நகரங்களாக்கவுமே, நிபுணர்களை வைத்து தொழிற்கூடங்களையும், கல்விக்கூடங்களையும், கேளிக்கை, சங்கீதம், நடனம், பார்க், பூஞ்சோலை முதலியவைகளையும் நகரங்களில் நிர்மாணித்து, கிராமத்திலிருக்கும் பாமர மக்களை தேனிற்காக ஈக்கள் மொய்த்துக் கொள்வதுபோல், நகரங்களை மொய்க்க வைத்து பட்டினியோடு அலைய வைக்கிறார்கள்.

இதுவரை வந்த அனுபவத்தைக்கொண்டு, மேல் நாடுகளில் எந்தத் தொழிற்சாலைகளையோ, கல்விச் சாலைகளையோ பெரிய நகரங்களில் வைக்க விடாமல் கிராமப்புறங்களில் அமைத்து வருவதால், நகர வாசலை விட்டு வெளியில் எவ்வளவு மைல் தூரம் சென்றாலும் நகரம் மாதிரியே தோற்றம் அளிக்கிறது. இங்குள்ள நிலைமையைப் பார்க்கும்போது நகரங்களைவிட்டு ஒரு 25மைல் போகும்போது பரந்த காடுகளும் நெருங்கிய காலி குடிசைகளும் காட்சி அளிக்கிறது.

கிராமங்களைச் சுரண்டி, நகரங்களுக்குக் கொடுத்தும், நகரங்களைச் சுரண்டி அரசாங்கத்திற்குக்

கொடுத்தும் அங்கிருந்து பிச்சை கேட்டு வாங்குவது கூடாது என்பதைத்தான் பெரியாரவர்கள் சொல்லுகிறார்கள்.

13,000 பெண்கள் கையெழுத்துச் செய்து பிரதமர் நேருவிடம் போய் சினிமாக்களைப் பார்ப்பதால் குழந்தைகள் கெட்டுப் போகிறார்களென்று முறையிட்டார்கள். நேருவும், நமது ஆச்சாரியாரும்கூட சினிமாக்களால் அநேகர் கெட்டு விடுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

சுவாசப் பையிலும், சுவாசக் குழாயிலும் புற்றுவியாதிகள் 100-க்கு 43 பேருக்குப் புகைப் பிடிப்பதால் வருவதாகக் கூறப்படுகிறது. மற்ற எல்லா காரணங்களாலும் பாக்கி உள்ளவர்களுக்கு வருகிறது.

1500 மாணவர்கள் படிக்கும் கல்லூரியில் நாள் ஒன்றுக்கு 700 சிகரெட்டு பாக்கெட்டுகள் விற்கப்படுகின்றன. நம் தேசத்தில் 36 கோடி ரூபாய்க்கு சிகரெட்டு முதலிய புகையிலை வஸ்து உபயோகப்பட்டு வருகி[illegible]வே கணக்குப்படி 36 கோடி மக்களுக்கு, தலை ஒன்[illegible]ங்கு ரூபாய் இருந்தாலும்கூட, மிகச் சிறுவர்களு[illegible]ட்டு களில் அநேகரும், பெண்களில் பெரும்பா[illegible] சிகரெட்டாவது, சுருட்டாவது கு[illegible] பெரும்பாலும் இளைஞர்கள்தான் குடிக்[illegible]தா? அ[illegible]ம் நன்மையு[illegible]ம்

காப்பியை உபயோகிப்பது எவருக்கு[illegible]சுவான் என்பதும், எண்ணையில் வருத்த பொருள்களை[illegible]ால் தால் இருதயவியாதிகளுக்கும் புற்றுவியாதிகளுக்கு[illegible] கொடுக்கிறதென்றும், பழுப்பு சர்க்கரையைவிட வெள்[illegible] சர்க்கரையில் சத்து இல்லை என்பதும் எல்லோருக்கும் தெரியும். இந்தக் குறைகளை நீக்க முற்பட்டால் 13,000 பெண்களுக்குப் பதில் 13 லக்ஷம் பெண்கள் சினிமா வேண்டும் என்றும், இன்னும் 13 லக்ஷம் பேர் வெள்ளை

சர்க்கரைதான் வேண்டும் என்றும், இன்னும் 13 லக்ஷம் பேர் காப்பிதான் வேண்டும் என்றும், சிகரெட்டுதான் வேண்டும் என்றும் கையெழுத்துச் செய்து மிக பலமான கூட்டங்களிலிருந்து எதிர்ப்பு வரத்தான் செய்யும். அரசாங்கத்துக்கு ஆற்றலிருக்கும் பக்ஷத்தில் ஒவ்வொன் றிற்கும் சட்டங்கள் இயற்றி, இந்தக் குறைகளை நீக்க முடியாமலா போய்விடும்? ஆனால், இவை தொடர்ந்து தான் வருகின்றன.

இப்பொழுது இருக்கும் கல்வி முறை உபயோக மற்றது என்று எல்லோரும் சொல்கின்றார்கள்.

சோதிடங்கள், ரேகை சாஸ்திரங்கள் இவைகளிலும் கெடுதல்கள் உண்டாகிறது என்றும் சொல்லுகிறார்கள். 'விடுதலை', 'தமிழ் நாடு', 'நம் நாடு' போன்ற சில தினசரிகள் தவிர்த்து அநேக பத்திரிகைகள் தம் வருவாய்க்காகவே தமக்கு நம்பிக்கை இல்லாமலிருந்தும் கூட ராசி பலனை வெளியிட்டு வருகிறார்கள். இவை களால் நன்மையில்லாததன்றி மிகக் கெடுதல்கள் உண்டாகிறதென்று சதா பெரியார் வற்புறுத்தி வருவது யாருக்குத் தெரியாது? அதே மாதிரி மந்திரிகள் தாங்கள் ஒரேயிடத்திலிருந்து வேலையைக் கூர்ந்து கவனிப்பதை விட்டு, இராப்பகலாக சுற்றிக் கொண்டிருப்பதில் வீண் செலவுதான் நேரிடுகிறது. சுகபோக சாமான்களையும், இங்கே குறைந்த செலவில் உற்பத்தி செய்யும் சாமான் களையும் இன்னும் இறக்குமதியாக்கிக் கொண்டுதான் இருக்கின்றன. இவற்றையெல்லாம் கவனித்துப் பார்லி மெண்டில் சட்டங்கள் செய்து அமுல் நடத்தினால், நடக்கும் கெடுதல்களை சீர்திருத்த முடியாமலா போய் விடும்?

திட்டங்களை நிறைவேற்ற கவர்ன்மெண்டுக்கு அமோகமான வரவேற்போடு பொதுமக்கள் கடன் கொடுக்கிறார்கள் என்று மந்திரிமார்கள் மார்தட்டிப்

பேசுகிறார்கள். நம் நாட்டில் எப்போதும் செலாவணியில் இல்லாத பணம் புதிதாக ஒன்றும் வந்துவிடவில்லை. திட்டங்கள் நிறைவேறட்டும் என்ற எண்ணத்தோடு கொடுத்தவர் நூற்றுக்கு ஒருவர்தான் இருக்கலாம். பின் எப்படி இவ்வளவு கடன் துகை கிடைத்தது என்று கேட்பீர்கள்? பொதுவாக வரிச் சுமையுங்கூட தாங்க முடியாத ஏழைகள் இருக்குமிடங்களில் ஆச்சரியப்படும் படி சிலரிடத்தில் பணம் இருக்கிறது. ஆனால், மிகச் சிலரிடத்தில் ஏராளமான பணமும் குவிந்திருக்கிறது.

இப்போது இருக்கும் நிலைமையில் புதுத் தொழில்கள் ஆரம்பிக்க யாரும் முன் வரவில்லை. அவ்விதம் ஆரம்பித்தாலும் இப்பொழுது உண்டாக்கியிருக்கும் அநேக சட்ட திட்டங்களால் லாபம் அதிகம் வருமா என்ற சந்தேகத்தால் பங்கு போட யாரும் முன் வருவதில்லை. யாருக்காவது கடன் கொடுக்கும் பக்ஷத்தில் விவசாயிகளாயிருந்தால் திரும்பி வாங்கப்படாது என்று அவசர சட்டம் வந்திருக்கிறது. மற்றபடி கடைகள் வியாபாரிகளுக்கு கொடுத்தால் அடிக்கடி விலாசம் மாறுவதாலும், கடைகள் தொழிற்சாலைகள் மூடுவிழா நடத்துவதாலும் பணம் வருமோ, வராதோ என்ற சந்தேகத்தால் அவர்களுக்கு கடன் கொடுக்க முடியவில்லை. பாங்குகளில் டிபாஸிட் போட்டால் அவைகளுக்கு ஒன்று அல்லது இரண்டு ரூபாய் வட்டிதான் கிடைக்கும். பணத்தை வீட்டில் வைத்திருந்தாலும் ஆபத்து. இந்த சமயத்தில் கவர்ண்மென்டிலிருந்து மூன்று அல்லது நான்கு ரூபாய் வட்டி வரும் பக்ஷத்தில் இது நல்ல வட்டி வீதம் என்று அநேகர் தங்களுடைய பணத்தைக் கொடுக்கிறார்கள். இதுவும் தவிர சர்க்கார் அதிகாரிகளின் தாட்சண்யத்திற்கு கட்டுப்பட்டும் அநேகர் பணம் போட்டிருக்கிறார்கள்.

இவ்விதமாகப் பணங்களை கடனுக்காகவும், வரிகளின் மூலமும் சுரண்டிவிட்டால் எந்தத் தொழிலாவது

எவ்விதம் வளரும்? காலக்கிரமத்தில் மூடுவிழாக்கள்தான் நடைபெற்று வளரும். தொழில்கள் வளர்ந்து வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிவதற்கு அஸ்திவாரமாக உள்ள மூலதனங்களே இவ்வாறு போகும்போது, விவசாய முன்னேற்றத்தைப் பற்றியோ, தொழில் முன்னேற்றத்தைப் பற்றியோ, நாம் கனவிலும் நினைக்க முடியாது. வரியின்றி அரசியல் நடத்தலாம் என்று பெரியார் சொல்வது என்ன? தொழில் முன்னேற்றம் நமது செல்வம். அந்தச் செல்வம் வளர்ந்தால் இவ்வளவு வரிகளுக்குத் தேவையில்லை. ஆகவே இம்மாதிரி சுரண்டல்கள் ஒழியவேண்டும் என்று அவர் சொல்லுகிறார்.

அநேக தப்பிதங்கள் செய்தபின் தனக்குக் கிடைத்த அனுபவத்தால் ஒருவன் நிபுணனாகிறான். மற்றவர்கள் மேல் அக்கரை கொண்டால் அவன் ஒரே நாளில் அநேகரை சிநேகிக்கலாம். ஆனால் ஒரு வருடமானாலும் தன்பேரில் மற்றவர்கள் பிரியங்கொள்ளச் செய்வதால், விரோதம்தான் விளையும். இன்று அரசாங்கம் மக்களின் பேரில் அக்கரையைச் செலுத்துவதற்குப் பதில் தங்கள் பேரில் மக்கள் அக்கரைப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறார்கள். இதனால் நாடு பின்னேறுமே தவிர ஒருக்காலும் முன்னேறாது.

தென்னாடாகினும், வடநாடாகினும் இந்தியா முழுதுமே அரசியல் கட்சிகள் அல்லது வேறு கட்சிகள் என்று பல கட்சிகள் ஜாதி மதங்கள் சுயநலம் இவைகளின் அடிப்படையில் இருக்கும் வரையில் எந்தக் காரணங்களைக் கொண்டும் நாடு முன்னேற முடியாது.

இதை முதலிலேயே அறிந்து, மகாத்மா காந்தியும் காங்கிரஸ் தன் லட்சியம் அடைந்த பின் காங்கிரஸ் கட்சியைக் கலைக்குமாறு சொன்னார். அவ்விதம் கலைத்திருக்கும் பக்ஷத்தில் வேறு எந்தக் கட்சியும் இருக்க

வேண்டியதில்லை. இருந்து தலை தூக்கவும் முடியாது. ஆட்சியின் மோகத்தால் கட்சியைக் கலைக்கும் சந்தர்ப்பத்தை கைவிடப்பட்டது. இனி இன்றுள்ள அரசாங்கத்துக்கு இருக்கும் கட்சிகளை ஒழிக்கவோ, ஒன்று சேர்க்கவோ பலமும் இல்லை; ஆற்றலும் இல்லை. இந்நிலையில் பெரியாருடைய திட்டப்படி தென்னாடாவது பிரியும் பட்சத்தில் எந்தக் கட்சிகளுக்கும் அவசியம் இருக்காது. அவ்விதம் கட்சிகள் இன்று இருந்தாலும், எல்லாக் கட்சிகளும் பெரியாருடைய கோட்பாடுகளைக் குறிக்கோளாகக் கொண்ட ஒரே கட்சியாக ஐக்கியமாய், முன்னே சொன்னபடி கல்வித்துறை, தொழில்துறை, வியாபாரத் துறைகளில் முன்னேறலாம்.

ஒவ்வொருவரும் அன்றாடம், ஒவ்வொரு கட்சித் தலைவர் பேச்சுக்களிலிருந்தும் தினசரி பத்திரிகைகளில் வெளியிடுவதிலிருந்தும் மேலே கண்டவைகளை தெரிந்து தானிருப்பீர்கள். நானும் கிளிப்பிள்ளை மாதிரி சொல்லித்தான் இருக்கிறேன். ஆனால் இன்று அதிகமாக நான் சொல்லுவது ஒரே ஒரு விஷயம். நம் தேசம் எதிர்காலத்தில் வளர்ச்சியடைவதற்கு இன்னாட்டிலுள்ள எல்லாரும் ஒரே கட்சியாக சேர்ந்து பெரியாருடைய கொள்கைகளை கடைப்பிடித்து நடப்பதுதான் மறுமுறையும் தெரிவித்துக்கொண்டு, அதன்படி நாம் நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அப்படி அடையும் வழியைப் பொதுமக்களுக்குக் காட்டியுள்ள பெரியார் அவர்களின் படத்தை மகிழ்ச்சியோடு திறந்து வைக்கிறேன்.

வணக்கம்

# அழகிரி பதிப்பகத்தின் பிற வெளியீடுகள்

1. டாக்டர் நாயர்

— மாயவரம் கெ. குமாரசாமி

2. தலைவர் பெரியார்

— குத்தூசி குருசாமி

3. உலகப் பெரியார்கள்

—குத்தூசி குருசாமி

4. இந்து மதம்

—குத்தூசி குருசாமி

5. சிறுகதைகள்

— குத்தூசி குருசாமி

6. டாக்டர் அம்பேத்கார் அறிவுக்கொத்து

7. மார்க்சியமா பெரியாரிசமா

—தவத்திரு குன்றக்குடி அடிகளார்

8. டாக்டர் இராமசாமி முதலியார் கட்டுரைக் கொத்து

9. மேடைப் பேச்சு-ஒரு கலை

—வாழி. ந. தட்சிணாமூர்த்தி, எம். ஏ.,

145

Printed at :
SRI YESES PRINT HOUSE,
132, Jani Jhon Khan Road,
Royapettah, MADRAS-600 014.
Phones : 83 32 31, 41 71 41